(தை 16) 2026 ஜனவரி 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு
திருவாரூர் நகர் மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும் அச்சமயம்
கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை.திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகர்மன்ற தலைவர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| **பொருள் எண் : 1**<br>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் திருவாரூரில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மற்றும் செவாலியர்.சிவாஜிகணேசன் அவர்களுக்கு திரு உருவ வெண்கல சிலை அமைத்திட கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன்படி, திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தின் முகப்பு பகுதி வார்டு 1, பிளாக் 21, நகரளவை எண்.1033/1 ல் 285 சதுரஅடி பரப்பளவில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் திரு உருவ வெண்கல சிலையும் மற்றும் 285 சதுரஅடி பரப்பளவில் செவாலியர்.சிவாஜிகணேசன் அவர்களின் திரு உருவ வெண்கல சிலையும் அமைத்திட அரசு வழிக்காட்டுதல் மற்றும் விதிகளுக்குட்பட்டு உரிய அனுமதி பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது. | 1094) ஒரு மனதாக தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 2**<br>நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>பனையடி அய்யனார் கோவில் தெரு, முடுக்குத்தெரு சந்து மற்றும் ஞானியார் குல சந்தில் அவசர அவசியம் கருதி சாலை அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். | 1095) தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 3**<br>திருவாரூர் நகராட்சியின் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ன் கீழ் ரூ.5.42 கோடி மதிப்பீட்டில் தஞ்சை சாலை பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி முன்புறம் புதியதாக வணிக பயன்பாட்டிற்கு தரைதளத்தில் 14 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 14 கடைகள் ஆக மொத்தம் 28 கடைகள் மற்றும் மீன் மற்றும் இறைச்சி விற்பனைக்கூடம் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகளுக்கு முன் ஏலம்/முன் ஒப்பந்தபுள்ளிகள் (Pre Action-Pre Tender) கோருவதற்கு, பொது நிபந்தனைகளுக்கும் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. முன் ஏலம்/முன் ஒப்பந்தபுள்ளிகள் (Pre Action-Pre Tender) கோருவதற்கான பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்<br>3. முன் ஏலம் / முன் ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்குரிய உத்தேச | 1096) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

விளம்பரக்கட்டணம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 1746/2024/அ5**

**பொருள் எண் : 4**

1097) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24 ன் கீழ் பழங்கள் மற்றும் காய்கறி பல்பொருள் வணிகவளாக கடைகளுக்கு 17.12.2025 ல் 15வது பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரப்பட்டது.

| வ. எண் | கடையின் விவரம் | ஏலதாரர்களின் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | குறைந்தபட்ச ஏலக்கேள்வி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | D பிளாக் கடை எண் 43 (மாற்றுத்திறனாளிக்கான கடை) | க.சித்ரா, க.பெ.கண்ணன், 141. மீனாட்சி அம்மன், கோவில் தெரு, மன்னார்குடி. | - | 4250 /- |
| | | ப.பிரகதீஸ்வரன், 1/35, கீழ தெரு, பட்டமங்களம், நாகப்பட்டினம் | 4200/- | - |

மேற்படி அட்டவணையில் கண்டுள்ள உயர்ந்தபட்ச ஏல கேள்வியாக ரூ.4250/- திருமதி.சித்ரா கோரியுள்ளார் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1746/2024/அ5**

**பொருள் எண் : 5**

1098) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

தியாகபெருமாநல்லூர் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்து கணக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2026 உடன் முடிவடைவதால் 01.04.2026 முதல் மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான விளம்பர கட்டணம் மற்றும் இதர செலவுகள் ரூ.2,00,000/- ஐ பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.292/2018/அ5**

**பொருள் எண் : 6**

1099) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் ட்டிவி.ஆர் (4) 470 கொரடாச்சேரி கலைஞர் பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு சங்கத்திற்கு ஆவின்பால் உப பொருள்களை விற்பனை செய்திட ஒரு கடை ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டது. துணை பதிவாளர் (பால்வளம்) திருவாரூர் அவர்களின்

ந.க.எண்: 747/2025/இ நாள்: 02.01.2026 ம் தேதியிட்ட கடிதத்தில் சங்கத்தின் மூலம் திருவாரூரில் ஆவின் பாலகம் அமைக்க போதிய பணியாளர்கள் இல்லை எனவும் கடை ஒதுக்கீடு வேண்டாம் என தெரிவித்து ஒதுக்கீடு கோரிய மனு மீதான நடவடிக்கையை கைவிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் கடை எண்.20 ஐ பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விட தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

---

**பொருள் எண் : 7**

1100) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை-28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12199/ஆர்1/2025 நாள் 24.12.2025-ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில், சொத்துவரி விதிப்புகளுக்கு பெயர் மாற்றக் கட்டணத்தினை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்.836. நாள் 16.12.2025-இன் படி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள். 2023-ல் மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி பெயர்மாற்றக்கட்டணத்தினை கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | |
|---|---|---|
| | குடியிருப்பு பயன்பாடு (ரூபாயில்) | பிற பயன்பாடு (ரூபாயில்) |
| 1 | 500 | 1000 |

மேற்கண்ட திருத்தப்பட்ட சொத்துவரி பெயர் மாற்றக் கட்டண விகிதத்தினை. இந்நகராட்சியில் செயல்படுத்துவதற்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

மேலும் குடிநீர் கட்டண விதிப்புகளுக்கு பெயர் மாற்றக் கட்டணம் எக்காரணம் கொண்டும் வசூலித்தல் கூடாது. சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்படும் பொழுது சம்மந்தப்பட்ட சொத்துவரி விதிப்பு எண்களுக்குரிய குடிநீர்க் கட்டணம் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு எண்களையும் உரிய உரிமையாளரின் பெயருக்கு அதே விண்ணப்பத்தின் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. உயர்வு செய்யப்பட்ட கட்டண விகிதங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண்.4321/2025/அ1</u>**

| | |
|---|---|
| **பொருள் எண் : 8**<br>திருவாரூர் நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்து கொள்வதற்கான உரிமம் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்621/2023/அ5 நாள் 09.03.2023 ன் படி 09.03.2023 முதல் 08.03.2026 வரை குத்தகை நடத்திக்கொள்ள திருமதி.பி.சுஜாதா, க.எண் 91 முன்னாள் இராணுவத்தினர் நகர், மருதப்பட்டினம், திருவாரூர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.<br><br>மேற்படி, புதிய பேருந்து நிலையத்தை இடித்து விட்டு புதிதாக பேருந்து நிலையம் கட்டும் பணி 20,12.2023 முதல் 30.09.2025 வரை மேற்கொள்ளப்பட்ட நிலையில் கழிவறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் நிறுத்தம் செய்யப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. கட்டுமான பணிகள் முடிவுற்று பேருந்து நிலையம் 01.10.2025 முதல் பயன்பாட்டிற்கு வந்த நிலையில் குத்தகைதாரர் 01.10.2025 மீண்டும் கட்டண கழிவறை வசூல் செய்யும் உரிமம் திரும்ப வழங்க கோரியும். கட்டுமான பணிகள் நடைபெற்ற காலம் 20.12.2023 முதல் 30.09.2025 உள்ள காலத்தினை நீட்டிப்பு செய்து தர குத்தகைதாரர் கோரியுள்ளார். எனவே, புதிய பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வரப்பெற்ற காலமான 20.12.2023 முதல் 30.09.2025 வரையுள்ள காலத்தினை, மூன்றாண்டு காலம் உரிமம் முடிவடையும் காலத்தில் இருந்து கால நீட்டிப்பு செய்து (01.10.2025 முதல் 31.12.2027 வரை) கட்டண கழிவறையில் உரிமம் வசூல் செய்து கொள்ள மன்றத்தின் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு.**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 621/2023/அ5** | 1101) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 9**<br>திருவாரூர் நகராட்சியின் தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனங்கள் பாதுகாப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமதிற்கான இனத்தை திரு.அம்பிகாபதி. த/பெ.சக்திவேல், குமரன் தெரு. பைபாஸ்ரோடு. என்பவர் மூன்றாண்டு குத்தகை எடுத்து நடத்தி வந்தார். அன்னார் குத்தகை தொகை ரூ.19,84,913/-க்கு பாரத் வங்கி, காசோலை எண் 093132 நாள் 01.07 2025 ன் படி நகராட்சிக்கு வழங்கிய காசோலையினை காசாக்குவதற்கு வங்கியில் செலுத்திய போது அன்னாரின் வங்கி கணக்கில் பணம் இல்லாமல் காசோலை திரும்ப வந்து விட்டதால் மேற்படி குத்தகைதாரர் மீது மாவட்ட ஒருங்கிணைந்த நீதி மன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தொடரப்பட்டதற்கு வழக்கு செலவினம் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.26450/- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2506/2017/15** | 1102) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 10**<br>திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் வளம் மீட்பு மையத்தில் (RRC) | 1103) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| தேங்கியுள்ள மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத மற்றும் விற்க இயலாத கழிவுகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் வாகனம் மூலம் நாளொன்றுக்கு 4 மெட்ரிக் டன் கழிவுகள் மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத விற்பனையாகாத கழிவுகளாக சேகரமாகிறது. இவற்றை திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பிட நகராட்சி மூலம் (Memorandam of Undertaking) செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது கனரக வாகனங்கள் அனைத்தும் தனியார் ஒப்பந்த நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும், வளம் மீட்பு மையத்தில் (RRC) மையத்தில் தேங்கியுள்ளதாலும், அவற்றை பொதுசுகாதார நலன் கருதியும் இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதியும், ஒப்பந்த அடிப்படையில் ஸ்ரீ முருகன் லாரி சர்வீஸ், தஞ்சை சாலை, திருவாரூர் தனியார் நிறுவனத்தின் கனரக வாகனம் மூலம் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.781, நாள். 30.01.2025-ன்படி, 01.01.2025 முதல் 31.03.2025 வரை 3 மாதங்கள் கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணிக்காலம் முடிவடைந்த நிலையில், மீண்டும் நகர்மன்ற தீர்மான எண்.1002, நாள். 07.08.2025-ன்படி 01.04.2025 முதல் 30.09.2025 வரை 6 மாதங்கள் கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணிக்காலம் முடிவடைந்த நிலையில், தற்போது பொதுசுகாதார நலன் கருதியும், இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதியும், 01.10.2025 முதல் 31.12.2025 வரை 3 மாதங்கள் இப்பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கு அதே செலவின அடிப்படையில் காலநீட்டிப்பு செய்தும், அதற்குண்டான உத்தேச செலவினத் தொகை ரூ.15,00000/- (பதினைந்து இலட்சம்) அனுமதித்திட கோரி ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு.<br><br>__அலுவலகக்குறிப்பு.__<br><br>1) பொதுசுகாதார நலன் கருதியும் இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதியும் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 01.10.2025 முதல் 31.12.2025 வரை 3 மாதங்கள் இப்பணியினை காலநீட்டிப்பு செய்தும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.15,00000/- (பதினைந்து இலட்சம்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.465/2024/எச்1 | |
| **பொருள் எண் : 11**<br>திருவாரூர் நகராட்சியில் பொதுப்பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பணிபுரியும் சீருடை பெறும் பணியாளர்கள் ஆண்/பெண், தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு 2025 -2026 ஆம் ஆண்டிற்கான சீருடை விநியோகம் செய்திட, அரசு அங்கீகாரம் கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் வாங்கிக்கொள்ளவும், மற்றும் தையற்கூலி அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,25,000/- த்திற்கு | 1104) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும்.<br>**ந.க.எண்.2849/2025/எச்1**<br>அலுவலகக்குறிப்பு.<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, கோ ஆப்டெக்ஸ் திருவாரூர் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| **பொருள் எண் : 12**<br>உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண்.738/2020/அ7/உ.இ(ஊ), நாள்.04.08.2021 கடிதத்தில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளிலும் வீடுகள் தோறும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களை கண்டறிந்திட பல்ஸ் ஆக்ஸி மீட்டர்கள் வழங்கப்பட்டதற்கான பட்டியல் தொகை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.9975/2025/ஏ4, நாள்.09.08.2025, மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற அசல் வழக்கு எண்.W.P.No.16324/2025, தீர்ப்புரை நாள். 02.06.2025–ன்படி, திருவாரூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களை கண்டறிந்திட திருவாரூர் நகராட்சிக்கு 20 எண்ணிக்கையில் விநியோகிக்கப்பட்ட பல்ஸ் ஆக்ஸி மீட்டர்களுக்கான பட்டியல் தொகை ரூ.24000/– (ரூபாய் இருபத்து நான்கு ஆயிரம் மட்டும்) Ultra Globe Systems Trichy. என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும்.<br>**அலுவலகக்குறிப்பு.**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ரூ.24000/– (ரூபாய் இருபத்து நான்கு ஆயிரம் மட்டும்) Ultra Globe Systems Trichy. என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.499/2023/எச்1 | 1105) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 13**<br>திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட கிருமி நாசினிகள் இருப்பில் குறைவாக உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மற்றும் மாவட்ட ஆடசித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலங்களில் தடுப்பு நடவடிக்கை மற்றம் நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள போதுமான தளவாடசாமான்கள் மற்றும் கிருமிநாசினிகள் போதுமான அளவு இருப்பில் இருக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கியுள்ளனர்.எனவே எதிர்வரும் வடகிழக்கு பருவமழை தடுப்பு நடவடிக்கைப் பணிகள் தொய்வின்றி நடைபெற கீழ்கண்ட தளவாடசாமான்கள், மற்றும் கிருமிநாசினிகள் பொதுசுகாதாப்பணியிள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி பெற்று அரசு சார்பு நிறுவனம் | 1106) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| மூலம் வாங்கி கொள்ள ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு. | |

| வ.எண் | தேவைப்படும் தளவாடசாமான்கள், மற்றும் கிருமிநாசினிகள் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | நீர்த்த சண்ணாம்பு | 20 டன் |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 5 டன் |
| 3 | கருப்பு பினாயில் | 200 லி |
| 4 | லைசால் ஆயில் | 100 லி |
| 5 | லெமன் கிராஸ் ஆயில் | 100 லி |
| 6 | ஆசிட் | 100 லி |
| 7 | மண்வெட்டி | 20 (எண்ணிக்கை) |

மேற்கண்ட பொருட்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ12.00 இலட்சத்திற்கு மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலர், திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, மேல வடம்போக்கித்தெரு, திருவாரூர் அவர்களுக்கு உத்தரவு வழங்கலாம்.

ந.க.எண். 2850/2025/எச்1

**பொருள் எண் : 14**

1107) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 09.07.2025 மற்றும் 10.07.2025 ஆகிய இரண்டு நாட்கள் வருகை தர உள்ளதால், நடைபயணம் செல்லக்கூடிய நகரின் முக்கிய பகுதிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறும் இடம் S.S நகர் ஆகிய இடங்களில் மண் தள்ளும் பணிகள் மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் பின்புறம் கழிவுநீர் தேங்கி கோரை புதர்கள் அகற்றுதல், முக்கிய பிரதான சாலையின் இருபுறங்களிலும் உள்ள முட்புதர்கள் அகற்றுதல் மற்றும் சாலையோரம் உள்ள மண் அப்புறப்படுத்தும் பணிகள் JCB மற்றும் டோசர் இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்ள (1மணிநேரத்திற்கு) விலை விகிதம் கண்டறிய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றது. விவரம் கீழ்வருமாறு.

| பி.கே.எம்.செந்தில் ஒப்பந்ததாரர் திருவாரூர் | எஸ்.செந்தில்குமார் ஒப்பந்ததாரர் திருவாரூர் | ஆர்.பரிமளா ஒப்பந்ததாரர் திருவாரூர் |
|---|---|---|
| ரூ.1200/- | ரூ.1100/- | ரூ.1000/- |

| | |
|---|---|
| மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.1000/– (1 மணி நேரத்திற்கு) அளித்துள்ள ஆர்.பரிமளா ஒப்பந்ததாரர் திருவாரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு : –<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.1000/– (1 மணி நேரத்திற்கு) அளித்துள்ள ஆர்.பரிமளா ஒப்பந்ததாரர் திருவாரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் :1575/2025/எச்1 | |
| **பொருள் எண் : 15**<br>எதிர்வரும் வடகிழக்கு பருவமழை அதிக அளவில் இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பருவ மழையினை எதிர்கொள்ளும் வகையில் பணிகள் தங்கு தடை இன்றி நடைபெற வேண்டி உள்ளதால் கீழ்க்கண்டவாறு பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கான காலணிகள் மற்றும் மலை கோட் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கிக் கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூபாய் 1,25,000/– (ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கு. | 1108) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| **வ.எண்** | **காலணி பெறுபவர்கள் விவரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | ஆண் தூய்மை பணியாளர்கள் | 21 |
| 2 | பெண் தூய்மை பணியாளர்கள் | 12 |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 7 |
| 4 | ஓட்டுநர்கள் (1 செட் ஷூ) | 9 |
| | **மொத்தம்** | **49** |

| **வ.எண்** | **மழை கோட் பெறுபவர்கள் விவரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | ஆண் தூய்மை பணியாளர்கள் | 21 |
| 2 | பெண் தூய்மை பணியாளர்கள் | 12 |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 7 |
| 4 | ஓட்டுநர்கள் | 9 |

| | | |
|---|---|---|
| 5 | துப்புரவு ஆய்வர்கள் | 2 |
| 6 | பொறியியல் பிரிவு பணியாளர்கள் | 15 |
| | **மொத்தம்** | 66 |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3865/2025/எச்1**

**பொருள் எண் : 16**

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளை இணைத்திட நகராட்சி நிர்வாக இணை இயக்குநர், சென்னை அவர்களின் 18.06.2025 தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரைகளை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.326/2023/இ1 நாள்.19.06.2025 ன் படி திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 11 எண்ணிக்கை அரசு உதவிபெறும் பள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உத்தேசமாக 1450 எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு உணவு தயார் செய்து வழங்கிட ஏதுவாக கூடுதலாக புதிய 3 பர்னர் ஸ்டவ், ஹாட்பாக்ஸ், கரண்டி, போன்ற உபகரணங்கள் வாங்குவது அவசியமாகிறது. அதன்படி, நகர்மன்ற தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரைகளின் படி 1450 எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு உணவு தயார் செய்து வழங்கிட ஏதுவாக கூடுதலாக புதிய 3 பர்னர் ஸ்டவ், ஹாட்பாக்ஸ், கரண்டி, போன்ற உபகரணங்கள் வாங்கிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.70 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1071/2023/இ1**

1109) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| **பொருள் எண் : 17**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய தஞ்சை சாலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-23 ன் கீழ் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் கழிவறை அமைத்திட நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கை வரப்பெற்றதனைத்தொடர்ந்து புதிய கழிவறை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்.1008/2025/இ1** | 1110) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 18**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய தஞ்சை சாலை பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022-2023 ன் கீழ் ரூ.141.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் விவரப்படி எரிவாயு தகனமேடை (LPG Gasifier Crematorium) பணி மேற்கொள்ள அரசாணை எண்.88, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.06.2022 அரசாணையின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் M/s.GVN Madhura Properties, Chennai என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது LPG Gasifier Crematorium கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வந்து கீழ்கண்டவாறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு பிரேதம் 1க்கு ரூ.5500/- வீதம் பயன்பாட்டு கட்டணம் வசூல் செய்து எரிவாயு தகன மேடை மயானத்தினை பராமரிப்பு செய்து கொள்வதாக ISHA FOUNDATION, KAYANATHA SITHANAM, Isha Yoga Center, Velliangiri Foothills, Ishana Vihar (PO). Coimbatore-641114 என்ற தொண்டு நிறுவனம் கடிதம் எண்.ISHA/KSM/CBE/14112025 நாள்.14.11.2025 ன் படி கோரியுள்ளனர்.<br>1. எரியூட்டும் கலன் பராமரிப்பு.<br>2. தோட்டம் பராமரிப்பு.<br>3. மின்சாரம் மற்றும் பிளம்பிங் தொடர்பான பராமரிப்பு.<br>4. ஜென்செட் பராமரிப்பு.<br>5. கழிவறை மற்றும் இதர வசதிகள் பராமரிப்பு.<br>6. பிரேதம் எரியூட்டுவதற்கான செலவுகள்.<br>7. அஸ்தி சேகரித்து அன்றைய தினமே குடும்பத்தினரிடம் ஒப்படைத்தல்.<br>8. பராமரிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தொழிலாளர் வைப்புநிதி வழங்குதல்.<br>9. ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு.<br>மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் – 11எண்ணிக்கை, சென்னை – 1 எண்ணிக்கை, தஞ்சாவூர் மற்றும் நெய்வேலில் தலா 1 எண்ணிக்கை ஆக 14 எண்ணிக்கை எரிவாயு மயானத்தினை மேற்படி தொண்டு நிறுவனம் பராமரித்து வருவதாகவும் கடிதம் வழங்கியுள்ளது. எனவே மேற்காணும் தொண்டு நிறுவனத்தின் கடிதத்தினை பார்வையிட்டு திருவாரூர் நகராட்சியின் நவீன எரிவாயு தகன மேடை மயானத்தினை பராமரித்து | 1111) நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினைத்தொடர்ந்து பி'ரேதம் ஒன்றிற்கு ரூ.5,500 லிருந்து ரூ.500/- விலை குறைப்பு செய்து பிரேதம் ஒன்றிற்கு ரூ.5,000/- மட்டும் விலை நிர்ணயம் செய்திட ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது. |

கொள்வதற்கு ISHA FOUNDATION. KAYANATHA SITHANAM, Isha Yoga Center, Velliangiri Foothills, Ishana Vihar (PO), Coimbatore–641114 என்ற தொண்டு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொண்டு நிறுவனத்தின் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கிடகோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினைத்தொடர்ந்து பி'ரேதம் ஒன்றிற்கு ரூ.5,500 லிருந்து ரூ.500/– விலை குறைப்பு செய்து பிரேதம் ஒன்றிற்கு ரூ.5,000/– மட்டும் விலை நிர்ணயம் செய்திட ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ந.க.எண்.3920/2025/இ1

---

**பொருள் எண் : 19**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13355/2025/இஏ2 நாள்.14.05.2025 ன் படி 15 வது மத்திய நிதிக்குழு மானியம் (Health Grant) 2025–26 ன் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கொடிக்கால்பாளையம் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அப்பகுதியில் ஏற்கனவே இயங்கி வரும் 1961 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடம் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்துவிட்டு மேற்கண்ட கடிதத்தின்படி, புதிய கூடுதல் கட்டிடம் கட்டுவது அவசியமாகிறது. எனவே கொடிக்கால்பாளையம் ஆரம்ப சுகாதார நிலைய பகுதியில் உள்ள பழைய கட்டிடத்தினை இடிப்பதற்கான முன்மொழிவு தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கட்டிடத்தினை இடிப்பதற்கான அனுமதி கோரி முன்மொழிவு அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1414/2025/இ1–1)**

1112) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் : 20**

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய தஞ்சை சாலை பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் கழிவறை அமைக்கும் பணிக்கு ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டிற்கு பொது நிதி 2025–26இன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 05.01.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தி ல் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

1113) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய தஞ்சை சாலை பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் கழிவறை அமைக்கும் பணி | 15.00 | M/s.GVN Mathura Properties, Chennai | 0.07% குறைவு |
| | | | Thiru.AT Santhanam, Chennai | 4.86% அதிகம் |

மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "M/s.GVN Mathura Properties, Chennai" என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கபட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

**பொருள் எண் : 21**

1114) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 15 தியாகபெருமாநல்லூர் பேருந்து நிலையத்தில் தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.13.75 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

**பொருள் எண் : 22**

1115) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 15 தியாகபெருமாநல்லூர் பேருந்து நிலையத்தில் தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.13.75 லட்சம் மதிப்பீட்டிற்கு பொது நிதி 2025-26இன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 03.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 15 தியாகபெருமாநல்லூர் பேருந்து நிலையத்தில் தார் சாலை அமைக்கும் பணி | 13.75 | மெர்சஸ்.கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருவாரூர் | 0.02% குறைவு |
| | | | திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர் | 1.57% அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "மெர்சஸ்.கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருவாரூர்" என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

**பொருள் எண் : 23**

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 5 ராமகே தெருவில் தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.16.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

1116) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் : 24**

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 5 ராமகே தெருவில் தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.16.25 லட்சம் மதிப்பீட்டிற்கு பொது நிதி 2025-26இன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 03.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1117) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 5 ராமகே தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 16.25 | மெர்சஸ்.கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருவாரூர் | 0.03% குறைவு |
| | | | திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர் | 2.10% அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "மெர்சஸ்.கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருவாரூர்" என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

---

**பொருள் எண் : 25**

திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தினை பராமரித்திடும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

1118) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் : 26**

திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தினை பராமரித்திடும் பணிக்கு ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டிற்கு பொது நிதி 2025-26இன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 10.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

1119) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தினை பராமரித்திடும் பணி | 7.00 | திரு.எம்.அறிவானந்தம், திருவாரூர் | 0.02 % குறைவு |
| | | | திரு.எஸ்.ராஜாத்தி, திருவாரூர் | 1.20% அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "திரு.எம்.அறிவானந்தம்" என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

**பொருள் எண் : 27**

1120) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 1009/2025/இ1**

**பொருள் எண் : 28**

1121) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் பராமரிக்கும் பணிக்கு ரூ.9.95 லட்சம் மதிப்பீட்டிற்கு குடிநீர் நிதி 2025-26இன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 12.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் பராமரிக்கும் பணி | 9.95 | திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர் | 0.01% குறைவு |
| | | | திரு.கே.செந்தில்குமார், திருவாரூர் | 2.30% அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர்" என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 1009/2025/இ1

**பொருள் எண் :** 29

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசைபம்பு, அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.85 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.** 1009/2025/இ1

1122) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் :** 30

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசைபம்பு, அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம் பராமரிக்கும் பணிக்கு ரூ.9.85 லட்சம் மதிப்பீட்டிற்கு குடிநீர் நிதி 2025-26இன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 12.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தி | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

1123) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல் | | |
| 1. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசைபம்பு, அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம் பராமரிக்கும் பணி | 9.85 | திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர் | 0.02% குறைவு |
| | | | திரு.கே.செந்தில்குமார், திருவாரூர் | 1.60% அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் "திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர்" என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1009/2025/இ1**

**பொருள் எண் : 31**

1124) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

